தினகரன்
# கடலூர்
சனிக்கிழமை 31.7.2010



கடலூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஆட்சியர் சீத்தாராமன் தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் நடராஜன், மாசுக்கட்டுப்பாட்டு துறை அலுவலர் சேகர், குடிகாடு ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், சாசன் தொழிற்சாலை துணைத் தலைவர் மோகன், துணைப்பொது மேலாளர் எத்திராஜ், பி.ஆர்.ஓ மதியழகன். இடம்- சாசன் தொழிற்சாலை மருத்துவமனை வளாகம்.

### சுற்றுச்சூழலை பாதுகாக்க

## 1 லட்சம் மரக்கன்று நடும் பணி

### ஆட்சியர் துவக்கினார்

கடலூர், ஜூலை 31: கடலூர் மாவட்டம் முழுவதும் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஒரு பகுதியாக கடலூர் சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணியை ஆட்சியர் சீத்தாராமன் தொடங்கி வைத்தார்.

பூமி வெப்பம் அடையாத தடுப்பதற்கும், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும், பருவநிலையை எதிர்கொள்வதற்கும், கடலூர் மாவட்டத்தில் 1 லட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில் கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட், சாசன் பெட்ரோ கெமிக்கல்ஸ், டேன்பேக், டாக்ரோஸ், ஏசியன் பெயிண்ட்ஸ், அரபிந்தோ பார்மா லிமிடெட் உள்ளிட்ட நிறுவனங்களில் 3 ஆயிரம் மரக்கன்றுகள் மற்றும் சுற்றுப்புற பகுதியில் 7 ஆயிரம் என 10 ஆயிரம் மரக்கன்றுகள் ஆட்சியர் சீத்தாராமன் தலைமையில் நடப்பட்டது. பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

கடலூர் மாவட்டத்தில் வரும் 15ஆம் தேதிக்குள் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்படும். இந்த முறை மரக்கன்றுகள் நடுவதோடு மட்டுமல்லாமல் ஒரு மரக்கன்றுக்கு ஒருவர் வீதம் அதனை தத்தெடுத்து அவற்றை மரங்களாக வளர்க்கும் பொறுப்பினை எடுத்திருப்பது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். மரக்கன்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்ச எளிய முறையில் புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

வனத்துறை மூலம் 10 ஆயிரம் மரக்கன்றுகளும், ஈஷா யோகா மையத்தின் மூலம் 10 ஆயிரம் மரக்கன்றுகளும், சிப்காட் தொழிற்சாலை சங்கத்தின் மூலம் 10 ஆயிரம் மரக்கன்றுகளும், உழவர் மன்றங்கள் மூலம் 10 ஆயிரம் மரக்கன்றுகளும், அண்ணாமலை பல்கலை மற்றும் வேளாண் பல்கலை மூலமாக 10 ஆயிரம் மரக்கன்றுகளும் நடப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலை பகுதிகளில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் மரக்கன்றுகளும், கிராம பகுதிகளில் பலன் தரும் மரக்கன்றுகளும், கிராம சாலை பகுதிகளில் மழை தரும் மரக்கன்றுகளும் நடப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் தென்னை மரக்கன்று தரும் திட்டமும் உள்ளது.

கடலூர் மாவட்ட மக்களின் ஒத்துழைப்போடு விரைவில் கடலூர் மாவட்டம் பசுமை மிகு மாவட்டமாக மாறும். மரக்கன்றுகள் நடப்பட்டுள்ள பகுதிகளில் அந்தந்த நிறுவனங்களில் உள்ள அலுவலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ-மாணவிகள் மரக்கன்றுகளை சமுதாய நோக்குடன் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் நடராஜன், மாசுக்கட்டுப்பாட்டு அலுவலர் சேகர், தொழிற்சாலை துணை தலைமை ஆய்வாளர் தங்கராசு, சிப்காட் திட்ட அலுவலர் செல்வம், சிப்காட் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு செயலாளர் இந்திரகுமார், கோட்டாட்சியர் செல்வராசு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் முத்தையா, மாவட்ட கவுன்சிலர் சண்முகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு நிஜாமுதீன், ஒன்றிய கவுன்சிலர் சங்கர், சுற்றுச்சூழல் கண்காணிப்பகம் அருள் மற்றும் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# 1 லட்சம் மரக் கன்றுகள் நடும் பணி

## ஆட்சியர் தொடங்கி வைத்தார்

**கடலூர், ஜூலை 30:** கடலூர் மாவட்டத்தில் ஆகஸ்ட் மாதத்துக்குள் 1 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணியை, மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

புவி வெப்பம் அடைவதைத் தடுக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், பருவ நிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையிலும் கடலூர் மாவட்டத்தில் ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள் 1 லட்சம் மரக் கன்றுகள் நடப்பட உள்ளன.

மரங்கள் நடும் பணியை சிப்காட் பகுதியில் மாவட்ட ஆட்சியர் பெ. சீதாராமன் தொடங்கி வைத்தார். கெம்ப்ளாஸ்ட், சாசன் கெமிகல்ஸ், டாக்ராஸ் கெமிகல்ஸ், டான்பெக் ஆகிய தொழிற்சாலைகளை ஒட்டிய சாலையோரங்களில் மாவட்ட ஆட்சியர் மரங்களை நட்டார்.



அங்கு ஆட்சியர் பேசுகையில், கடலூர் மாவட்டத்தில் 1 லட்சம் மரங்கள் நடப்படும். சிப்காட் தொழிற்சாலைப் பகுதிகளில் தொழிற்சாலைத் துணைத் தலைமை ஆய்வாளர் மூலமாக 10 ஆயிரம் மரக் கன்றுகள் நடப்படும்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலமாக 50 ஆயிரம் மரக் கன்றுகள் நடப்படும். மற்றும் வனத்துறை, நெடுஞ்சாலைத் துறை, உழவர் மன்றங்கள், எக்ஸ்னோரா, செஞ்சிலுவைச் சங்கம் மூலமாகவும் மரங்கள் நடப்படும். நடப்படும் மரக் கன்றுகளைப் பாதுகாக்கவும் தண்ணீர் ஊற்றவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என தெரிவித்தார்.

தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் நிலத்தில் மண் சட்டிகளையும், மூங்கில் கம்புகளையும் பதித்து, அதில் தண்ணீர் ஊற்றி வேர்களைச் சென்றடையும் வகையில் சொட்டு நீர்ப்பாசன முறையை பயன்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படும். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.நடராஜன், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் வீ.தங்கராஜ், ஆய்வாளர் எம்.ராமமூர்த்தி, கெம்ப்ளாஸ்ட் முதன்மை நிர்வாகி என்.எஸ்.மோகன், சிப்காட் தொழிற்சாலைகள் சங்கத் தலைவர் இந்திரகுமார், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.நிஜாமுதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

← ← ←
கடலூர் சிப்காட் வளாகத்தில் மரம் நடுகிறார், ஆட்சியர் பெ.சீதாராமன்.